1992 ஏப்ரல் 1] [பேரவைத் தலைவர்]

சென்னைப் பல்கலைக் கழகத்தின் ஆட்சிமன்றக் குழுவிற்கு–செனட்- தமிழ்நாடு சட்டப் பேரவை உறுப்பினர்களிலிருந்து அறுவரைத் தேர்ந்தெடுக்க ஏற்பாடு செய்யுமாறு சென்னைப் பல்கலைக் கழகம் கோரியுள்ளது. தேர்ந்தெடுக்கப்படுவோர்களின் பதவிக் காலம் 2—5—1992 முதல் 3 ஆண்டுகள் ஆகும். இருப்பினும் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் ஏதாவது ஒரு காரணத்திற்காகப் பேரவை உறுப்பினர் பதவியை இழக்க நேரிட்டால் அந்த நாளோடு இப்பதவிக்காலம் முடிவடையும். வேட்பாளர்கள் நியமனத் தாள்கள் 14—4—1992 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்குள் பேரவைச் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும். நியமனத் தாள்கள் வேண்டுவோர் செயலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். நியமனத் தாட்கள் 15–4–1992 புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்குப் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும். விலகிக்கொள்ள விரும்புகிற வேட்பாளர்கள் 16—4—1992 வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்குள் விலகிக்கொள்ளலாம். நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு மேற்படுமாயின் 20—4—1992 திங்கட்கிழமை காலை 9-30 மணிக்கும் பிற்பகல் 1 மணிக்கும் இடையே தலைமைச் செயலகத்தில் உள்ள சட்டமன்றக் குழுக்கள் கூடும் அறையில் வாக்கெடுப்பு நடைபெறும்.

3. கவன ஈர்ப்பு.

(அ) சென்னை நகரில் கொசுத் தொல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. திரு. டி. சுதர்சனம் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. டி. சுதர்சனம்.

திரு. டி. சுதர்சனம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''சென்னை நகரில் கொசுத் தொல்லை அதிகமாகியுள்ளது குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, விவர அறிக்கை ஒன்று அவையின்முன் வைக்கப்பட்டிருக்கிறது.

விவர அறிக்கை.

கொசுக்களினால் ஏற்படும் நோய்கள் மலேரியா, யானைக் கால், டிங்கு காய்ச்சல், மூளைக் காய்ச்சல் ஆகியவைகள் ஆகும். அவைகளில் மலேரியா மற்றும் யானைக்கால் நோய் மட்டுமே சென்னை மாநகரில் அதிக அளவில் உள்ளது.

சென்னை நகரில் கடந்த 5 ஆண்டுகளில் பதிவாகிய மலேரியா மற்றும் யானைக்கால் நோய்கள் பற்றிய புள்ளி விவரங்கள் பின்வருமாறு :—

ஆண்டு.	மொத்தம் பதிவாகிய மலேரியா நோய்களின் எண்ணிக்கை.	மொத்தம் பதிவாகிய யானைக்கால் நோய்களின் எண்ணிக்கை.
(1)	(2)	(3)
1987 ..	31,126	831
1988 ..	34,400	1,041
1989 ..	45,622	642
1990 ..	51,272	359
1991 ..	67,013	238

சென்னை மாநகரில் கொசுக்கள் உற்பத்தியாவதற்குக் காரணங் கள் கீழ்வருமாறு :—

(அ) கூவம் ஆறு, ஓட்டேரி ஆறு, பக்கிங்ஹாம் கால்வாய், சன் தியேட்டர் கால்வாய் ஆகியவைகளில் அநேகமாக கழிவு நீர்தான் ஓடுகிறது. இதனால் இவ்விடங்களில் கழிவுநீர் தேங்கிய பள்ளங்கள் அதிகமாக தென்படுகிறது. மேலும் இவ்விடங்களில் ஆகாசத் தாமரை, நீர்க்களைத் தாவரங்கள் அதிகமாக உற்பத்தி யாகி, நீரோட்டத்தை தடை செய்து விடுகிறது. இதனால் கொசுக்கள் அதிகமாக உற்பத்தியாகின்றன. மேற்கூறிய ஆறு கள், கால்வாய்கள் சங்கமமாகும் கடலின் முகத்துவாரத்தில் மணல் அடைபட்டு விடுவதாலும் கொசுக்கள் உற்பத்தி அதிக மாக காணப்படுகிறது. கழிவுநீரை வெளியேற்றுவதற்காக அமைக்கப்பட்ட கால்வாய்கள் குப்பை கூளங்களால் அடைபட்டு விடுவதாலும், தண்ணீர் தேங்கி கொசுக்கள் அதிகமாக உற்பத்தி யாகின்றன.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1992, ஏப்ரல் 1] [திரு. சு. முத்துசாமி]

(ஆ) ஜார்ஜ் டவுன் பகுதிகளில் மேல்நிலைத் தொட்டிகள் கிணறுகள் அதிகமாகவும், நெருக்கமாகவும் இருக்கின்றன. மற்றும் சென்னையில் பல்வேறு பகுதிகளில் பொதுத்துறை நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள் அமைந்துள்ள கட்டிடங்களில் மேல்நிலைத் தொட்டிகள், நீர்நிலைத் தொட்டிகள், கிணறுகள் அதிகமாக இருக்கின்றன. இன்னும் சில இடங்களில் பல அடுக்கு மாடி கட்டிடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. இவ்விடங்களில் கொசுப்புழுக் கொல்லி மருந்து தெளிக்க வழி இல்லாமல் இருப்பதால் கொசுக்களின் உற்பத்தி அதிக அளவில் காணப்படுகிறது. சென்னை மற்றும் அதன் புறநகர் பகுதிகளிலும் காணப்படும் காலிமனைகள் கழிவுநீர் மற்றும் மழைநீர் சேருமிடங்களாக மாறிவிடுகின்றன. இவ்விடங்களில் கொசுக்கள் உற்பத்தியாவதற்கு ஏதுவாக இருக்கிறது.

கொசு மருந்து தெளிக்கும் பணிக்கு சுமார் 450 முதல் 500 தெளிப்பான்கள் பயன்படுத்தப்படுகிறது. சென்னை மாநகரங்களின் பல பகுதிகளில் ஊர்தியில் பொருத்தப்பட்ட மிகப் பெரிய புகை மருந்து அடிக்கும் இயந்திரங்களுடனும் மற்றும் மனிதர்கள் மூலம் எடுத்துச் சென்று இயக்கக்கூடிய 40 முதல் 50 வரை புகை மருந்து அடிக்கக்கூடிய இயந்திரங்களும், இத்துடன் 450 முதல் 500 தெளிப்பான்கள் மூலம் ஒவ்வொரு நாளும் கொசு ஒழிப்புப் பணி நடைபெறுகிறது.

கொசு தடுப்புப் பணி மக்களின் திட்டமாகக் கருதப்பட வேண்டும். பொதுமக்கள் சென்னை மாநகராட்சியின் பணிகளில் பங்கு கொண்டு தங்களின் ஒத்துழைப்பை நல்கினால் மட்டுமே கொசு ஒழிப்பினை முற்றிலும் கட்டுப்படுத்த முடியும். சென்னை மாநகராட்சி, பொதுத் தொண்டு நிறுவனங்களான குடியிருப்போர் நல்வாழ்வு சங்கம், எக்ஸ்னோரா, ஸ்டூடன்ஸ் ஆக்ஸன் குரூப் போன்ற அமைப்புகளோடு சேர்ந்து கொசு ஒழிப்புப் பணியினை மேலும் சிறப்பான முறையில் செயல்படுத்த திட்டமிட்டிருக்கிறது.

சுற்றுப்புறச் சூழ்நிலையை மாற்றி அமைத்தல், கொசுப்புழுக்களைக் கட்டுப்படுத்தும் நீர்வாழ் உயிரினங்களை பயன்படுத்துதல் மற்றும் நுண்ணுயிர் பூச்சிக்கொல்லிகளை பயன்படுத்துதல் போன்ற முறைகளை ஒருங்கிணைத்து பெரும் அளவு செயல்படுத்தப்பட உள்ளது. மேலும், இரயில்வே, பாதுகாப்புத் துறை (DEFENCE), குடிசை மாற்று வாரியம், வீட்டு வசதி வாரியம், குடிநீர் மற்றும் கழிவு நீரகற்று வாரியம், சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம் (M.M.D.A.) மற்றும் பொதுப்பணித் துறையின் பாசனப் பிரிவு போன்ற அமைப்புகளும் மாநகராட்சியின் கொசுத் தடுப்பு நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு கோரும் நோக்கத்துடன், இத்தகைய அமைப்பில் பணியாற்றும் அலுவலர்

களுடன், மாநகராட்சி அலுவலர்கள் அண்மையில் கலந்து பேசி மாநகராட்சிப் பணிகளுக்கு பெருமளவு உதவ வேண்டுமென வலியுறுத்தப்பட்டுள்ளது.

கொசுத் தொல்லையை உடனடியாக கட்டுக்குள் கொண்டு வர சென்னை மாநகராட்சி ''மூன்று அம்சத் திட்டத்தை'' தீட்டி உள்ளது. சென்னை நகரில் சுமார் 50 முதல் 60 விழுக் காடுகள் கொசுத் தொல்லைக்கு காரணமாக உள்ள நான்கு பெரிய (கூவம், ஓட்டேரி, பக்கிங்ஹாம் கால்வாய், அடையாறு) நீர் ஓட்டங்களிலும் மற்றும் 8 முக்கிய கால்வாய்களிலும் உற் பத்தி ஆகும் கொசுப் புழுக்களை ஒழிப்பதே இத்திட்டத்தின் முதல் அம்சமாகும். மேற்குறிப்பிட்ட நீர் ஓட்டங்கள் சென்னை நகரில் குறுக்கும், நெடுக்குமாக சுமார் 70 கி.மீ. நீளத்தில் ஓடுகிறது. சுமார் 540 கி.மீ. நீளம் பின்னிப் பிணைந்து ஓடுகின்ற மழைநீர் வடிகால் கால்வாயில் உள்ள கொசுப் புழுக்களை ஒழிப்பது இத்திட்டத்தின் இரண்டாவது அம்சமாகும். மூன் றாவது அம்சத்தின் கீழ் வீடுகளின் உட்புறத்திலும், வெளிப்புறத் திலும் காணப்படும் கொசு உற்பத்தியாகும் இடங்களில் வாரம் தோறும் தவறாமல் மருந்து தெளித்தல் நடவடிக்கை தீவிர மாக்கப்பட்டு இருக்கிறது. சுமார் 1,04,208 கிணறுகளுக்கும் 61,109 தொட்டிகளுக்கும் மற்றும் 74,522 மேல்நிலைத் தொட்டிகளுக்கும் வாரம் தோறும் இடைவெளிவிட்டு மருந்து தெளிக்கப்படுகிறது.

மாநகராட்சியின் செயல் திட்டத்தில் உள்ள சிறப்பு அம்சம் என்னவென்றால் கொசு தடுப்புப் பணியினால் ஏற்படும் தவறு களுக்கு ஊழியர்கள் பொறுப்பேற்று செயல்படுவதாகும். இத் திட்டம் முதல் முறையாக சென்னை நகரில் நடைமுறைப்படுத்த படுகிறது.

சென்னை நகரில் கொசு ஒழிப்பு நடவடிக்கைகளை அவ்வப் போது அரசு ஆய்வு செய்து வருகிறது. சென்ற ஆண்டில் செப்டம்பர் மற்றும் நவம்பர் ஆகிய மாதங்களில் முறையே சுகா தாரத் துறை செயலர் மற்றும் சிறப்புச் செயலர் ஆகியவர்கள் பொது சுகாதாரம் மற்றும் தடுப்பு மருந்து இயக்குநர், மாநக ராட்சி ஆணையர், மாநகராட்சி சுகாதார அலுவலர் ஆகியவர் களுடன் ஆய்வு செய்து கொசுத் தொல்லையை அறவே ஒழிப் பதற்கான நடவடிக்கைகள் பற்றி ஆலோசிக்கப்பட்டது.

மேலும், அண்மையில் மார்ச் மாதம் 2ஆம் தேதியன்று சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் கொசுத் தொல்லையை அறவே ஒழிப்பதற்கான நடவடிக்கைகள் எடுப்பது பற்றி ஆலோசனை நடத்தப்பட்டு தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

1992 ஏப்ரல் 1] [திரு. சு. முத்துசாமி]

சென்னை மாநகரில் கொசுக்கள் உற்பத்தியாகும் இடங்கள் அனைத்தையும் அடையாளங்கொண்டு, மேற்கண்ட இடங்களில் மருந்து தெளிக்கும் பணியினை மலேரியா தொழிலாளர்களால் குறிப்பிட்ட காலக் கெடுவுக்குள் செய்து முடிக்கப்பட வேண்டும் என்று அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது.

திரு. டி. சுதர்சனம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. விவர அறிக்கையிலே கொசு உற்பத்தி கூவம் ஆறு, பக்கிங்காம் கால்வாய், ஓட்டேரி நல்லா போன்ற இடங்களில் உற்பத்தியாகிறது என்று சொல்லியிருக்கிறார்கள். கூவம் மணக்கிறது என்று சொல்லி பல கோடி ரூபாய் செலவு செய்து கோயம்பேடு கழிவு நீர் நிலையத்திலே உள்ள கழிவுநீரைக் கொண்டு வந்து சேர்த்ததன் பயனாகத்தான் அதிக அளவில் கொசு சென்னையிலே உற்பத்தியாகிறது. சென்னை மாநகராட்சியின் நிதி நிலைமையின் காரணமாகக் கொசு மருந்து வாங்குவதில் காலதாமதம் ஆகிறது. எப்பொழுதும் மருந்து இல்லை என்ற நிலை இருக்கிறது. சரியான அளவு மருந்துகளை வாங்க சிறப்பு நிதி மாநகராட்சிக்கு வழங்கப்படுமா ? பொதுப்பணித் துறை, குடிசை மாற்று வாரியம், வீட்டு வசதி வாரியம், மெட்ரோ போன்ற அமைப்புகளிடமிருந்து கொசு ஒழிப்பதற்கான குறிப்பிட்ட சிறப்பு நிதியை மாநகராட்சிக்கு வழங்கும் எண்ணம் தமிழக அரசுக்கு உண்டா என்று அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே. இதற்கு மருந்து தேவையான அளவிற்கு வாங்குவதற்கு ஏற்கெனவே நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. எனவே, அதிலே எந்தப் பிரச்சினையும் இல்லை, ஆகவே, மருந்துகள் அதிகம் தேவை என்ற பொழுதுதான் குடிசை மாற்று வாரியம் மற்ற அமைப்புக்களையெல்லாம் கேட்க வேண்டிய அவசியம் இருக்கும். எனவே, இப்பொழுது முறைப்படுத்துவதிலேதான் பிரச்சினை இருந்திருக்கிறது. மருந்து தேவையான அளவிற்கு இருந்தாலும்கூட அதை எப்படிப் பயன்படுத்துவது, எப்படி அந்த மருந்து அடிப்பது என்ற திட்டத்தை வகுப்பதிலே பிரச்சினை இருந்திருக்கிறது. இப்பொழுது அது சீர்படுத்தப்பட்டிருக்கிறது. எனவே, அந்த நிலைமை சீரடையும்,

திரு. டி. சுதர்சனம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூவம் நதியிலே கோயம்பேடு கழிவுநீர் அகற்று வாரியத்தினுடைய நீரைக் கொண்டு வந்து கலக்கிறார்கள், அதைத் தடுத்து நிறுத்த முடியுமா என்பதையும், இந்த ஆண்டு மலேரியாவின் மூலமாக 67,000 பேர் பாதிக்கப்பட்டிருப்பதாக விவர அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கிறது. மகாராஷ்டிரா மாநிலத்திலே கூட இதுபோன்ற ஒரு நிலைமை ஏற்பட்டு அங்கே

[திரு. டி. சுதர்சனம்] [1992 ஏப்ரல் 1

கொசு ஒழிப்பதற்கு என்று தனியாக ஒரு அமைப்பை ஏற்படுத்தி இப்பொழுது அங்கே ஆண்டொன்றுக்கு 51,000 பேர்தான் மலேரியாவினால் தாக்கப்படுவதாகச் சொல்கிறார்கள். அதுபோன்ற ஒரு அமைப்பை நம்முடைய சென்னையிலே ஏற்படுத்த அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இப்பொழுது கூவத்தைப் பொறுத்தவரை கழிவுநீர் வந்து கலக்காமல் இருப்பதற்கு ஒரு தனித் திட்டத்தை இப்பொழுது ஆய்வு செய்து கொண்டிருக்கிறோம். எனவே, அது முழுமையாக ஆய்வுபெற்ற பின்புதான் அந்த நடவடிக்கையை எடுக்க முடியும். இதற்குத் தனியாக ஒரு அமைப்பு என்று சொன்னார்கள். வாரியம் போலக் கேட்கிறார்கள் என்று நான் கருதுகிறேன். எனவே, அப்படிப்பட்ட ஒரு எண்ணம் அரசாங்கத்திற்கு இல்லை, இருக்கிற அமைப்பையே வைத்து கொசுக்களை ஒழித்து விடலாம் என்ற முயற்சியைத்தான் இந்த அரசாங்கம் இப்போது மேற்கொண்டிருக்கிறது.

முற்பகல் 10—35

(ஆ) ஆண்டிமடம் தொகுதி பெரியாத்துக்குறிச்சியிலுள்ள ஆதி திராவிட மக்களின் இடுகாடு ஆக்கிரமிக்கப் பெற்றுள்ளது குறித்து,

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்த கவன ஈர்ப்பு,

திரு. ஆர். தங்கராஜ் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. ஆர். தங்கராஜ்.

திரு. ஆர். தங்கராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. **

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஆர். தங்கராஜ், நிகழ்ச்சி நிரலிலே இருக்கிற குறிப்பை அப்படியே படியுங்கள். ஏற்கெனவே, நீங்கள் சொன்னது, அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது, நிகழ்ச்சி நிரலில் இருப்பதை அப்படியே படியுங்கள்,

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க, அகற்றப் பெற்றது,

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS